**செய்தி வெளியீடு எண்: 168** **நாள் :23.3.2016**

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தேர்தல் விதிமீறல் – உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் சென்ற வெளிநாட்டுப் பணம் பறிமுதல் – 23.3.2016 வரை 2 லட்சம் புகார்கள்.</u>**

தேர்தல் பறக்கும் படையினர் 21.3.2016 அன்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, தர்மபுரி மாவட்டத்தில் ரூ.5.12 லட்சம், ஈரோட்டில் ரூ.1.50 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3.23 லட்சம், நாகப்பட்டினத்தில் ரூ.2.4 லட்சம், சிவகங்கை மாவட்டத்தில் ரூ.1.03 லட்சம் மற்றும் துபாய் நாட்டு பணம் 480 திர்ஹாம், தேனியில் ரூ.1 லட்சம், திருப்பூரில் ரூ.1.34 லட்சம், நெல்லையில் ரூ.11.20 லட்சம், தூத்துக்குடியில் ரூ.1 லட்சம், விருதுநகரில் ரூ.2 லட்சம் என மொத்தம் ரூ.30,37,460/– ரொக்கத்தினை உரிய ஆவணங்கள் உடன் கொண்டு செல்லாததால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்குழுவினரால் உரிய அனுமதியில்லாமல் கொண்டு சென்றதாக 95 கேஸ் ஸ்டவ், 43 குக்கர்கள் போன்றவையும் கைப்பற்றப்பட்டன. இதுவரை ரூ.5.48 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

நிலையான கண்காணிப்புக்குழு (SST) சோதனையில் கிருஷ்ணகிரியில் ரூ.2.44 லட்சம், மதுரை கம்பம் பகுதியில் ரூ.1.45 லட்சம் என மொத்தம் ரூ.3.89 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டதால், 21.3.16 வரை இக்குழுவினரால் ரூ.6,47,12,653/– ரொக்கம் கைப்பற்றி, சார்கருவூலங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் சுவர் விளம்பரம் செய்தது, கட்சிக்கொடி கம்பங்களை அகற்றாதது, அனுமதியில்லாமல் கட்சி கொடிக்கம்பங்களை வைத்தது துபான்ற காரணங்களுக்காக பல்வேறு அரசியல் கட்சியினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டன.

தேர்தல் விதிமுறைகளை மீறியதாக (Model code violation) 23.3.16 வரை 2,01,549 புகார்கள் பெறப்பட்டு, 1,07,732 புகார்களில் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டதால் புகார்கள் விலக்கி கொள்ளப்பட்டன. இதுவரை 1482 வழக்குகள் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டன. வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியது, அனுமதி பெறாமல் கூட்டம் நடத்தியது, ஒலிபெருக்கி விதியினை மீறியது போன்ற காரணங்களுக்காக இதுவரை 1493 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**